HMD

**அரையாண்டுத் தேர்வு - 2023**

12 - ஆம் வகுப்பு

**வரலாறு**

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். 20 X 1 = 20

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2. கூற்று : ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
காரணம் : இங்கிலாந்தில் தடையற்ற வணிகக் கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது.
அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

3. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்
ஆ) G.சுப்ரமணியம் - விடிவெள்ளிக் கழகம்
இ) மின்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம் - 1904
ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

4. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்
அ) புலின் பிஹாரி தாஸ் ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார்கோஷ் ஈ) குதிரம் போஸ் மற்றும் பிரஃபுல்லாசாக்கி

5. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசன்ட் இ) பி.பி. வாடியா ஈ) எச்.எஸ்.ஆல்காட்

6. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

7. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தை தொடங்கிய இடம்
அ) கேதா ஆ) தண்டி இ) சம்பரான் ஈ) பர்தோலி

8. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம்
ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே
ஈ) கொல்கத்தா - ஹுக்ளி

9. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

10. மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
அ) சட்ட மறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

11. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ............ .
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

12. பின்வருவனவற்றை காலவரிசைப்படுத்துக.
அ) ஜமின்தாரி முறை ஒழிப்புச் சட்டங்கள் ஆ) அதிக விளைச்சலைத் தரும் வீரிய ரக விதைகள் பயன்பாடு
இ) தமிழ்நாட்டில் முதல் நில உச்சவரம்புச் சட்டம்
***கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினைத் தேர்வு செய்க.***
அ) ii, i, iii ஆ) i, iii, ii இ) iii, ii, i ஈ) ii, iii, i

13. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது? அ) 200 ஆ) 150 இ) 100 ஈ) 75

14. போப்பாண்டவரால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தை நவீனமயமாக்கியவர் யார்?
அ) டோனடெல்லா ஆ) ரபேல் இ) லியானர்டோ டாவின்சி இ) மைக்கேல் ஆஞ்சிலோ

15. கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
அ) வர்ஜின் ஆஃப் ராக்ஸ் ஆ) இறுதி விருந்து இ) மோனலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்

16. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ............ இல் நடைபெற்றது.
அ) 1775 ஆ) 1773 இ) 1784 ஈ) 1799



**Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com**

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

17. ........ இடையே ஏழு வாரப் போர் நடந்தது
அ) டென்மார்க், பிரஷ்யா ஆ) பியட்மாண்ட் - சார்டினியா, ஆஸ்திரியா இ) பிரான்ஸ் - பிரஷ்யா ஈ) ஆஸ்திரியா - பிரஷ்யா

18. ............. க்குப் பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது அ) ரஷ்ய - ஜப்பானியப் போர்
ஆ) இரண்டாம் அபினிப் போர் இ) இரண்டாம் ஆங்கிலோ - சீனப் போர் ஈ) சீன - ஜப்பானியப் போர்

19. அமெரிக்கா ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942 இல் பசிபிக் பகுதியில் தலைமையேற்று வழிநடத்தியவர் ........... ஆவார். அ) மெக் ஆர்தர் ஆ) ஐசன் ஹோவர் இ) ஜெனரல் டி கால் ஈ) ஜார்ச் மார்ஷல்

20. "பனிப்போர்" எனும் சொல்லை உருவாக்கியவர்
அ) பெர்னட் பரூச் ஆ) ஜார்ஜ் ஆர்வெல் இ) ஜார்ஜ் கென்னன் ஈ) சர்ச்சில்

## பகுதி - II

**குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 30 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 7 X 2 = 14

21. தேசியம் என்றால் என்ன?
22. மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" (The Medicant Policy) என்றால் என்ன?
23. இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
24. புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?
25. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.
26. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
27. ஜவகர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை?
28. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
29. ஜட்லாந்து போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.
30. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.

## பகுதி - III

**குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 7 X 3 = 21

31. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை" ஆய்க.
32. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
34. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
35. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.
36. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
37. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
38. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
39. முதல் மொராக்கோ சிக்கல் எவ்வாறு நிகழ்ந்தது?
40. சீன தேசிய அரசியலில் கோமின்டாங் கட்சியின் பங்கை விவாதத்திற்கு உட்படுத்துக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 X 5 = 35

1. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க.
***(அல்லது)*** ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

2. அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. ***(அல்லது)***
ஆ) பிரிவினைக்குப் பின் இந்தியாவில் கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
i) ஜம்மு காஷ்மீர் ii) ஜுனாகத் iii) ஹைதராபாத் iv) பாகிஸ்தான் v) நேபாளம்

3. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க. ***(அல்லது)***
ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

. அ) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை கோட்பாடுகள் யாவை? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளை இணையத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக. ***(அல்லது)*** ஆ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

அ) பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்? ***(அல்லது)***
ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பெற்ற கூட்டு சிந்தனையாளர்களை (collectivist Thinkers) அடையாளப்படுத்தி அவர்கள் சோஷலிச சிந்தனையை செழுமையாக்க ஆற்றிய பங்கைக் கூறுக. ***(அல்லது)***
ஆ) முதல் உலகப் போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

அ) சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மா சே - துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக. ***(அல்லது)***
இரண்டாம் உலகப் போரில் நிகழ்ந்த ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டிட்டு காட்டவும்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# அரையாண்டுத் தேர்வு – 2023 கிருஷ்ணகிரி மாவட்டம்

## 12-ஆம் வகுப்பு – வரலாறு

### பகுதி – 1

1. அ. 1915
2. இ. கூற்று சரி, காரணம் தவறு
3. அ. பக்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்த மடம்
4. இ. ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்
5. ஆ. அன்னிபெசண்ட்
6. ஆ. கோகலே
7. இ. சம்பரான்
8. இ. பம்பாய் - தானே
9. ஈ. பாரசீகம்
10. இ. வெள்ளையனே வெளியேறு இயக்கம்
11. இ. ஆந்திரா
12. ஆ. 1, 3, 2
13. இ. 100
14. ஈ. மைக்கேல் ஆஞ்சிலோ
15. ஈ. மடோனாவும் குழந்தையும்
16. ஆ. 1773
17. ஈ. ஆஸ்திரியா – பிரஷ்யா
18. ஈ. சீன-ஜப்பானியப் போர்
19. அ. மெக் ஆர்தர்
20. அ. பெர்னட் பரூச்

### பகுதி – 2 (ஏதேனும் 2 குறிப்புகள்)

21.

**தேசியம் என்றால் என்ன ?**

- தேசியம் என்பது ஒருநாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல்.
- தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்தல்
- தனது நாட்டின் பண்பாடு மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துதல்

22.

**மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" என்றால் என்ன ?**

- மிதவாதிகள் ஆங்கிலேயரிடம் கடைபிடித்த கவனமான அணுகுமுறை
- தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிட ஆங்கிலேயரிடம் **மன்றாடுதல்**
- அமைதியான வழியில் ஆங்கிலேயரிடம் **மனுக்களைச் சமர்பித்தல்**

23.

**இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது ?**

- இந்தியப் பணியாளர் சங்கத்தை 1905 ஆம் ஆண்டு பூனாவில் கோபால கிருஷ்ண கோகலே தோற்றுவித்தார்
- இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்க இது நிறுவப்பட்டது
- பின்தங்கிய, ஊரகமற்றும் பழங்குடியினமக்களின் மேம்பாட்டுக்காக கல்வியறிவூட்டல் மற்றும் இதர சமூகக் கடமைகளில் ஈடுபடுதல்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

24.

**புகழ் பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E.ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது ?**

- H.E.ஹோம்ஸ் கோரக்பூர் அமர்வு நீதிபதியாகப் பணியாற்றிய போது சௌரி சௌரா வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 172 விவசாயிகளுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தவர்.
- கான்பூர் சதி வழக்கு இவர் முன்னிலயில் விசாரணைக்கு வந்தது.

25.

**ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.**

லின்லித்கோபிரபு 1940 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சில சலுகைகளை இந்தியர்களுக்கு தருவதாக அறிவித்தார். அவை

i. வரையறுக்கப்படாத ஒரு தேதியில் **டொமினியன் அந்தஸ்து** வழங்குதல்
ii. அரசப் பிரதிநிதி குழுவில் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
iii. போருக்குப்பின் தங்களுக்கென **அரசியல் சாசனத்தை** இயற்ற இந்தியர்களுக்கு வாய்ப்பளித்தல்.

26.

**இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது ?**

- இந்தியஅரசுச் சட்டம் 1935 கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ ஆவணம்
- இந்தியா– பாகிஸ்தான் பிரிவினையின் போது பயன்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகும்.

27.

**ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை ?**

- பொருளாதாரத்தை வளர்த்தல்
- வேளாண்மைத் துறையை மேம்படுத்துதல்
- உற்பத்தி துறையை விரிவாக்கம் செய்தல்
- வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல்
- வறுமையைக் குறைத்தல்.

28.

**பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?**

பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல் வேடம் தரித்து 100 கிளர்ச்சியாளர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையை கொண்டு வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறி 342 தேயிலைப் பெட்டிகளை கடலுக்குள் வீசி எறிந்தனர். இந் நிகழ்வு பாஸ்டன் தேநீர் விருந்து எனஅழைக்கப்பட்டது.

29.

**ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.**

- டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்தில் நடந்த முக்கியமான கடற்போராகும்
- இப்போர் முடிவுபடாத போராக இருந்தது
- ஜட்லாந்து போர் முதல் உலகப் போரின் மிகப்பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது.

30.

**அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.**

- அமெரிக்காவின் உளவு நிறுவனமான மத்திய புலனாய்வு முகமை CIA 1947 இல் நிறுவப்பட்டது.
- சோவியத் யூனியனின் உளவு நிறுவனம்– KGB 1954 இல் நிறுவப்பட்டது.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

## பகுதி – 3 (ஏதேனும் 3 குறிப்புகள் மட்டும்)

31.

**மெக்காலேயின் " இந்தியக் கல்வி குறித்து குறிப்புகளை" ஆய்க.**

- 1835 இல் மெக்காலே தனது புகழ் பெற்ற **"இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்"**வெளியிட்டார்.
- ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்விக்கு ஆதரவாக வாதிட்டார்.
- ரத்தத்திலும், நிறத்திலும் இந்தியராக இருக்க வேண்டும்
- விருப்பத்தில், கருத்தில், ஒழுக்கநெறிகளில், அறிவில் ஆங்கிலேயராய் இருக்க வேண்டும்

32.

**கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார் ?**

- தூத்துக்குடியில் சுதேசி முயற்சிகள்அடக்கப்பட்டன.
- சுதேசிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவமதிக்கப்பட்டனர்.
- திருநெல்வேலி நிகழ்வுக்கு பழிவாங்க சதித்திட்டம் தீட்டப்பட்டது.
- பாரத மாதா என்ற புரட்சிகர குழுவில் வாஞ்சிநாதன் உறுப்பினராக இருந்தார்.
- இத்தகைய காரணங்களால் வாஞ்சிநாதன் ஆஷ் துரையை சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டார்

33.

**தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.**

- 1916 ல் இந்தியாவில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை இரட்டைக் குறிக்கோள்களைக் கொண்டதாக இருந்தது.
- பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது
- தாய்நாடு பற்றிய பெருமை உணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது.

34.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.**

- சத்யபால், சாய்புதீன்கிச்லு கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து 1919 ஏப்ரல் 13 அன்று ஜாலியன் வாலாபாக் பகுதியில் பொதுக்கூட்டம் நடந்துகொண்டிருந்தது.
- அங்கு இராணுவ வீரர்களுடன் சென்ற ஜெனரல் டயர் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டார்
- 379 பேர் இறந்தனர்.1000 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.
- ரவீந்திரநாத் தாகூர் தனது நைட்வுட் பட்டத்தை துறந்தார்.

35.

**தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்பைக் குறித்து எழுதுக.**

- திரு.வி.கவுடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை இவர் தோற்றுவித்தார்
- 1923 ஆம் ஆண்டு முதன் முறையாக மே தினத்தைக் கொண்டாடினார்
- 1928 ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்தார்

36.

**இந்திய அரசமைப்பின் தனித் தன்மைகள் யாவை ?**

- குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளை உறுதி செய்யும் ஓர் ஆவணமாக உள்ளது.
- இந்தியஅரசமைப்பு, சுதந்திரமான தேர்தல்ஆணையம், வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையும் உறுதிசெய்தது.
- மக்கள் பிரதிநிதிகளுக்குச் சட்டம் இயற்றும் இறையாண்மையை உறுதிபடுத்தியது.
- இந்தியஅரசமைப்பு , நீதித்துறையின் சுதந்திரத் தன்மையையும் உறுதி செய்தது.

www.Padasalai.Net

37.

**இந்திய வேளாண்மையின் பின் தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை ?**

**நிறுவனக் காரணி**

நிலவுடைமை, விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே நிலவிய சமூக, பொருளாதார உறவுகளைக் குறிப்பதாகும்.

**தொழில் நுட்பக் காரணி**

சிறந்தவிதைகள், உரங்கள், நீர்ப்பாசனம், இயந்திரங்களை பயன்படுத்தாமை

38.

**மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன் ?**

- இத்தாலியில் சமயச்சார்பின்மை கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது.
- லத்தீன் மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களைக் கண்டுபிடித்தனர்.
- பெரிகிளிஸ் காலத்து படைப்புகளையும், கிரேக்க ரோமானிய கடந்த காலப் படைப்புகளையும் கண்டுபிடித்தனர்
- சட்டம் மற்றும் தத்துவம் போன்ற படிப்புகளுக்காக இத்தாலிய பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

39.

**முதல் மொராக்கோ சிக்கல் எவ்வாறு நிகழ்ந்தது ?**

- இங்கிலாந்துடன் ஏற்பட்ட புரிதலை முன்னிருத்தி பிரான்ஸ் செயல்பட துவங்கியது.
- 1905 இல் பிரெஞ்சு தூதுக்குழு மொராக்கோவின் ஃபெஸ் நகரை வந்தடைந்தது.
- ஃபெஸ் நகரை பிரான்சின் பாதுகாப்பிற்குட்பட்ட பகுதியாக கருதி செயல்பட்டது
- ஜெர்மனி கடும் எதிர்ப்பை தெரிவித்தது. ஆனால் பிரிட்டன் ஆதரித்தது.

40.

**சீன தேசிய அரசியலில் கோமின்டாங் கட்சியின் பங்கை விவாதத்திற்கு உட்படுத்துக.**

- கோமின்டாங் கட்சியை நிறுவியவர் டாக்டர் சன்–யாட்–சென்
- சன்–யாட்–செனின் மறைவுக்குப் பிறகு சியாங்–கே–ஷேக் தலைவரானார்.
- "**வடக்கத்தியப் பயணம்**" என்று அறியப்படும் அணி திரண்டப் பயணத்தில் சியாங்–கே–ஷேக் பொதுவுடைமைவாதிகளையும், தொழிற்சங்கத்தினரையும் ஒடுக்கி சீனாவில் நடுவன் அரசை நிறுவினார்.

பகுதி - 4

41. அ.

www.Padasalai.Net

**பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக, பொருளாதார காரணிகளை ஆராய்க.**

**சமூகக் காரணங்கள்**

**1. புதிய நிலவுடைமை முறை**

- நிலத்தை விற்பனை பொருளாக்கியது
- இந்தியாவில் வேளாண்மையை வணிகமயமாக்கியது
- நிலவரி செலுத்தாமல் இருந்தால் நிலங்களை பறிமுதல் செய்து ஏலம் விட்டனர்
- சந்தைக்கு தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்ய விவசாயிகள் வற்புறுத்தப்பட்டனர்

**2. அவுரிக் கலகம்**

- ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு எதிராக 1859 – 60 இல் நடைபெற்ற **"இண்டிகோ கலகமே"** அவுரிக் கலகம் ஆகும்.
- சாயம் தயாரிக்க பயன்படுத்தப்படும் இச் செடியை பயிரிட இந்திய விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- பண்ணையாளர்கள் சந்தை விலையை விடக் குறைவான விலைக்கு அவுரியை வாங்கினர்
- இதனால் புது ஒப்பந்தங்கள் போடமறுத்து விவசாயிகள் புரட்சியில் ஈடுபட்டனர்.

**பொருளாதாரக் காரணங்கள்**

- ஆங்கில அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வாணிபம் எனும் கொள்கையைப் பின்பற்றியது.
- ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின் போதும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர்.
- இந்தியாவில் தொழில்கள் நீக்கம் செய்யப்பட்டதால் மக்கள் பலர் வேலை இழந்தனர்.
- இதனால் இந்தியர்கள் 5 வருடத்திற்கு ஒப்பந்தக் கூலிகளாக புலம் பெயர்ந்தனர்

ஆ

**இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.**

**சுதேசி நீராவி கப்பல் கம்பெனி**

- 1906 ல் வ.உ.சிசுதேசி நீராவி கப்பல் கம்பெனியை பதிவு செய்தார்
- S.S லாவோ, S.S கலியா எனும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.
- நாளடைவில் சுதேசி கப்பல் கம்பெனிக்கு ஆதரவு பெருகியது.
- வ.உ.சியின் செயல்பாடுகளை தேசியத் தலைவர்கள்பாராட்டினர்

**கோரல் மில் நூற்பாலை வேலைநிறுத்தம்**

- 1908 ல் கோரல் மில் தொழிலாளர்களின் மோசமானவேலை, வாழ்க்கைச் சூழல்கள் வ.உ.சி, சிவா ஆகியோரின் கவனத்தை கவர்ந்தது.
- வ.உ.சியும், சிவாவும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர்
- கோரல்மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்
- செய்தி பத்திரிக்கைகள் இந்த வேலை நிறுத்தத்தை ஆதரித்தது.
- இறுதியில் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்

**வ.உ.சி. , சுப்ரமணிய சிவா சிறைவாசம்**

- 1907 ல் பிபின் சந்திர பால் விடுதலையான நாளை சுதேசி தினமாக கொண்டாட வ.உ.சி. யும் சுப்ரமணிய சிவாவும் முடிவு செய்தனர்.இதற்கு அரசு மறுத்தது.
- மறுப்பையும் மீறி இருவரும் செயல்பட்டனர். இதனால் தேசத் துரோக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். சுப்ரமணிய சிவாவுக்கு 10 ஆண்டுகள் நாடு கடத்துதல் தண்டனை வழங்கப்பட்டது. வ.உ.சி. க்கு ஆயுள் தண்டனை ( 20 ஆண்டுகள்) விதிக்கப்பட்டது.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

42. அ

**இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.**

**சம்பரான் சத்தியாகிரகம் –1917**

சம்பரானில் இருந்த விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று இந்திய மக்களை ஒன்றிணைக்கும் முதல் முயற்சியை மேற்கொண்டார்.

**அகமதாபாத் மற்றும் கேதா சத்தியாக்கிரகம் –1918**

கேதா போராட்டம் மற்றும் அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தி வெற்றி பெற்றார்.

**ரௌலட் சட்டம் – 1919**

ரௌலட் சட்டத்திற்கு எதிராக வேலை நிறுத்தத்தைக் கடைபிடிக்குமாறு காந்தியடிகள் அழைப்பு விடுத்தார்.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை – 1919**

காந்தி ஜாலியன் வாலாபாக் படுகொலையை கடுமையாக சாடினார்.

**ஒத்துழையாமை இயக்கம் – 1920**

இந்திய அளவில் காந்தியடிகள் தொடங்கிய முதல் அறப்போராட்டம் ஆகும். இது பெரும் வெற்றி அடைந்தாலும் வன்முறை பாதைக்கு திரும்பியதால் காந்தியடிகள் இவ்வியக்கத்தை கைவிட்டார்.

**சட்ட மறுப்பு இயக்கம் – 1930**

உப்பு மீது வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து காந்தி சபர்மதி ஆசிரமத்தில் இருந்து தண்டிவரை 78 தொண்டர்களுடன் 375 கிலோமீட்டர் தூரம் நடந்தே சென்றார். அங்கு ஒரு பிடி உப்பை கையில் எடுத்து உப்புச் சட்டத்தை மீறினார்.

**வட்டமேஜை மாநாடு –1931**

இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார்.ஆனால் ஏமாற்றம் மிஞ்சியது.

**காந்தி–இர்வின் ஒப்பந்தம் 1931**

- சத்யாகிரக பிரச்சாரத்தைக் கைவிட காந்தியடிகள் உறுதி ஏற்றார்.
- போராட்டத்தில் பங்கெடுத்த இந்தியர்கள் விடுதலை செய்ய இர்வின் பிரபு ஒப்புக் கொண்டார்.
- 1931 ஆம் ஆண்டு காந்தி–இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது.

**பூனாஒப்பந்தம் – 1932**

- தீண்டத்தகாதோருக்கு தனித் தொகுதிகள் வழங்கப்பட்டதை எதிர்த்து காந்தி ஏர்வாடா சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார்
- காந்திக்கும் அம்பேத்காருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் ஆகும்.
- இதன் விளைவாக வகுப்பு வாரித் தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942**

காந்தியடிகள் 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார். இந்த போராட்டத்தின் போது **"செய் அல்லது செத்தமடி"**என்ற கோசத்தை எழுப்பினார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தினால் நாடு முழுவதும் வன்முறைகள் ஏற்பட்டன.

ஆ




43. அ

**பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.**

**இந்து மத மறுமலர்ச்சி**

- ஆரியசமாஜத்தின் மூலம் இந்து மறுமலர்ச்சிக்கான குரல் ஒங்கி ஒலிக்கத் தொடங்கியது.
- "சுத்தி" மற்றும் "சங்கதன்" அமைப்புகள் இந்து முஸ்லிம்களை பிளவு படுத்தியது.

**முஸ்லிம் உணர்வின் எழுச்சி (or) சர் சையது அகமதுகானின் பங்கு**

- இஸ்லாமியர் தங்களை அலிகார் இயக்கத்தின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டனர்.
- பிரிட்டிஷ்ஷார் சையது அகமதுகானுக்கு ஆதரவளித்தது.
- இவர் ஆங்கிலேயர்களுடன் இணக்கமான கொள்கையை பின்பற்றினார்

**பிரிட்டிஷ்ஷாரின் பிரித்தாளும் கொள்கை**

- இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகளை ஆங்கிலேயர்கள்தடுத்தனர்.
- "கூட்டு இந்தியா" உருவாவதைத் தடுப்பதே பிரிட்டஷாரின் நோக்கமாக இருந்தது.

**பசுவதையும் வகுப்புவாத கலவரங்களும்**

- "கௌராக்ஷினி" என்ற பசு பாதுகாப்பு சங்கங்கள் போர்க்குணம் கொண்டவர்களாக மாறினர்.
- இதனால் கலகங்கள் ஏற்பட காரணம் ஆகின.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**காங்கிரஸ் அரசாங்கத்தின் தோல்வி**

- இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வகுப்புவாத அமைப்புகளில் ஈடுபட்டனர்.
- இதை காங்கிரஸ் அரசு தடுக்க தவறியது.
- இதுவே முஸ்லிம்கள் காங்கிரஸ் மீது நம்பிக்கை இழக்க காரணமாக அமைந்தது.

ஆ

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.**

- 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கினார்.
- காந்தியடிகள் மக்களை நோக்கி "**செய் அல்லது செத்துமடி**"என அழைப்பு விடுத்தார்.
- 1942 ஆகஸ்ட் 9 அன்று அதிகாலையில் காந்தியடிகள் உட்பட பலரை கைது செய்தனர்.
- கடையடைப்புகள், மறியல்கள், வேலை நிறுத்தங்கள், வன்முறைகள் மோதல்கள் நடந்தன.
- ஆரம்பத்தில் நகரத்திலும், பின்னர் கிராமங்களிலும் இயக்கம் பரவியது.
- காவல்நிலையங்கள், இரயில்நிலையங்கள், அஞ்சல்அலுவலகங்கள் சேதப்படுத்தப்பட்டன.
- 1943 ல் காந்தியடிகள் சிறையில் 21 நாட்கள்உண்ணாவிரதம் இருந்தார்.
- 1943 ஆம் ஆண்டு முடிவில் 91,836 பேரை கைது செய்தனர்,1060 பேர்பலியாகினர்.
- காந்தியடிகளின் உடல் நலக் காரணங்களுக்காக 1944 மே 6 இல் விடுதலையானார்.

44. அ

**இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.**

**இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள்**

- இந்திய வெளியுறவுக் கொள்கையின் சிற்பி நேரு
- ஏகாதிபத்தியம், காலனிய எதிர்ப்பு, இனஒதுக்கல் ஆகியவற்றை எதிர்த்தல்
- வல்லரசு நாடுகளுடன் அணிசேராமை
- ஆப்பிரிக்க–ஆசிய நாடுகளுடன் ஒற்றமை
- பிற நாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல்
- பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்
- பிற நாட்டின் எல்லையை மதித்தல்
- உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்

**அணிசேராக் கொள்கை**

- வல்லரசு நாடுகளுடன் அணிசேராமல் இருப்பதையே அணிசேராக் கொள்கை எனப்படும்.
- 1955 ல் இந்தோனேசியா நாட்டின் பாண்டுங் நகரில்ஆப்பிரிக்க– ஆசிய மாநாடு நடைபெற்றது.
- இம் மாநாடு தான்அணிசேரா இயக்கத்தை தோற்றுவிப்பதற்கான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

ஆ

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

**இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.**

**அறிவியல் ஆராய்ச்சி ஆய்வகங்கள்**

- ❖ அறிவியல் ஆய்வை ஊக்குவிக்க–டாடா ஆராய்ச்சி நிறுவனம்
- ❖ புனேயில்–தேசிய வேதியியல் ஆய்வகம்
- ❖ புதுடெல்லியில்–தேசிய இயற்பியல் ஆய்வகம்
- ❖ அணு அறிவியல் ஆய்வுக்கு –அணுசக்தி முகமை அமைப்பு
- ❖ வேளாண்மைக்கு–இந்திய வேளாண் ஆய்வுக் கழகம்

**இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள்( IIT)**

- ❖ இந்தியாவில் முதல் IITகரக்பூரில் நிறுவப்பட்டது.
- ❖ இதனைத் தொடர்ந்து டெல்லி, பம்பாய், கான்பூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டன.
- ❖ அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் எனும் ஒரு குடையின் கீழ் பெரும்பாலான ஆய்வு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன

**வேளாண் ஆய்வுக் கழகம்**

- ❖ வேளாண்மை துறையில் நடைபெறும் ஆய்வுகளை மேற்கொள்கிறது. வேளாண்மை, மீன் வளர்ப்பு , வனங்கள், பால் வளம் ஆகியவற்றை மேற்கொள்கிறது.
- ❖ இந்தியாவில் 67 வேளாண்மை பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் 3 பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் உள்ளன.

**அணுசக்தி ஆணையம்**

- ❖ அணு சக்தி மற்றும் அணு ஆயுத உற்பத்தி மீது கவனம் செலுத்துகிறது.
- ❖ அறிவியல் ஆய்வுக்காக பல நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது.

45. அ

www.Padasalai.Net

**பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?**

**மார்டிடன் லூதர்**

- மார்டின்லூதர் ரோமுக்கு பயணம் மேற்கொண்ட அவர் தேவாலயத்தின் ஊழல் மற்றும் ஆடம்பரம் குறித்து வருந்தினார்

**லூதரின் 95 குறிப்புகள்**

- 95 குறிப்புகள் என்ற தலைப்பில் ரோமானிய தேவாலயத்திற்கு எதிராக 95 புகார்களை எழுதினார்
- அந்த புகார்களை விட்டன்பெர்கில் உள்ள தேவாலயத்தின் கதவுகளில் ஆணி அடித்து தொங்கவிட்டார்
- பைபிள் மட்டுமே உன்னதமானது. போப்போ, பிஷப்புகளோ இல்லை என்று வாதிட்டார்
- லூதர் பைபிளை ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்தார்

**லூதரின் பிராட்டஸ்டன்ட்களின் விதிகள்**

- போப்பாண்டவரின் அதிகாரத்தை ஏற்கவில்லை
- போப்பாண்டவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்
- தங்களுக்கு என்று தேவாலயங்களை நிறுவினார்கள்
- பிராட்டஸ்டன்ட் நெறிமுறைகளை வகுத்ததன் மூலம் பிராட்டஸ்டன்ட் இயக்கத்தை மார்ட்டின்லூதர் ஒருங்கிணைத்தார்

**வோர்ம்ஸ் சபை**

- போப்புக்கும், லூதருக்கும் இடையே நடந்த பேச்சு தோல்வியடைந்தன
- லூதரின் புத்தகங்கள் அனுமதி மறுக்கப்பட்டு எரிக்கப்பட்டன
- சட்டத்துக்குப் புறம்பானவர் லூதர் என்று பேரரசால் அறிவிக்கப்பட்டார்
- இறுதியில் வடஜெர்மனி பிராட்டஸ்டன்ட் நாடாக மாறியது.

ஆ

**அமெரிக்க விடுதலைப் போருக்கானகாரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்த விவாதிக்கவும்.**

**அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள்**

- நாவாய் சட்டங்கள்
- சர்க்கரை சட்டம்
- முத்திரைச் சட்டம்
- பாஸ்டன் படுகொலை
- பாஸ்டன் தேநீர் விருந்து
- பொறுத்துக் கொள்ள முடியாத சட்டங்கள்
- கியூபெக் சட்டம்
- இச் சட்டங்களை நீக்க வேண்டி இங்கிலாந்து மன்னர் **மூன்றாம் ஜார்ஜுக்கு , ஆலிவ் கிளை விண்ணப்பம்** அளிக்கப்பட்டது. இதை மன்னர் நிராகரித்தார்.

**போரின் போக்கு**

- 1776 ஜீலை 4 இல் 13 குடியேற்றங்களும் தங்கள்விடுதலையை அறிவித்தது. இதனால் போர் ஏற்பட்டது.

www.Padasalai.Net

- இங்கிலாந்து படைகளுக்கு **வில்லியம் ஹோவும்**, அமெரிக்கப் படைகளுக்கு **ஜார்ஜ் வாஷிங்டனும்** தலைமை தாங்கினர்
- **வில்லியம் ஹோவ்** சில இடங்களில் வெற்றி பெற்றாலும் பின்னர் சரடோகா போரிலும், யார்க் டவுன் போரிலும் இங்கிலாந்து தோல்வியடைந்தது.

**விளைவுகள்**

- 1783 இல் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பாரிசில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது.
- ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரானார்.

46. அ

**பத்தொன்பதாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பெற்ற கூட்டு சிந்தனையாளர்களை அடையாளப்படுத்தி அவர்கள்சோஷலிச சிந்தனையை செழுமையாக்க ஆற்றிய பங்கைக் கூறு.**

**எட்டியன்–கேப்ரியல்மொராலி**

தான் எழுதிய நூலான **"கோட்–டேலா–நேச்சர்"** என்பதில் தனியுடைமையை மறுத்து சமூகத்தை பொதுவுடைமை அமைப்பாக மாற்ற வேண்டும் என்ற முன்மொழிவை வெளிப்படுத்தினர்.

**செயின்ட் சைமன்**

சமய குருக்களின் இடத்தை விஞ்ஞானிகளைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

**சார்லஸ் பூரியர்**

அனைவருக்கும் குறைந்த பட்ச தேவைகள் கிடைத்து விட்டால் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கடந்து விடமுடியும் என்று வாதிட்டார்.

**இராபர்ட் ஒவன்**

தான் வெளியிட்ட நூலான **"சமூகத்தின் புதிய பார்வை"** என்பதில் தேசிய கல்விக் கொள்கை, வேலைவாய்ப்பற்றோருக்கு பொதுப்பணி வழங்கல், வறுமைஒழிப்பு போன்ற சீர்திருத்தங்களை விவாதித்தார்.

**பியர்ரி–ஜோசப் பிரௌதன்**

தான் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் **"உடைமைகள் யாவும் திருடப்பட்டவையே"** என்று குறிப்பிட்டார். அனைத்து வகை அரசுகளும் அடக்குமுறை தன்மை கொண்டவையே என்று கருதினார்.

**கார்ல்மார்க்ஸ்**

இவருடைய சிந்தனை கம்யூனிசம் எனப்பட்டது. **தாஸ்கேப்பிடல்** நூலில் உழைக்கும் வர்க்கத்தை முதலாளி வர்க்கம் சுரண்டுவதை கார்ல்மார்க்ஸ் அழுந்தக் கூறியுள்ளார்.

www.Padasalai.Net

ஆ

**முதல் உலகப்போரின் காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக.**

**காரணங்கள்**

**கூட்டணி முறையின் பரிணாமம்**

- 1882 இல் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி இணைந்து மூவர் கூட்டணி உருவானது.
- 1907 இல் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா இணைந்து முக்கூட்டு நட்பு உருவானது.

**மொராக்கோ பிரச்சனை**

- 1905 இல் பிரெஞ்சு தூதுக்குழு மொராக்கோவின் ஃபெஸ் நகரை வந்தடைந்தது.
- ஜெர்மனி கடும் எதிர்ப்பை தெரிவித்தது. ஆனால் பிரிட்டன் பிரான்சை ஆதரித்தது.

**போஸ்னிய சிக்கல்**

- தனது பாதுகாப்பில் இருந்த போஸ்னியாவை இணைப்பதாக ஆஸ்திரியா அறிவித்தது.
- கொந்தளித்த செர்பியா மற்றும் ரஷ்யா சரியான நேரத்தை எதிர்நோக்கி காத்திருந்தது.

**பால்கன் போர்கள்**

- முதல் பால்கன் போரில் துருக்கி தோல்வி அடைந்தது.
- இரண்டாவது பால்கன் போரில் பல்கேரியா தோல்வி அடைந்தது.

**உடனடிக் காரணம்**

- ஆஸ்திரிய இளவரசர் போஸ்னியாவில் ஒரு செர்பிய மாணவனால் கொல்லப்பட்டார்
- 1914 ஜீலை 28 இல் ஆஸ்திரியா செர்பியாவை தாக்கியது. இதனால் முதல் உலகப் போர் மூண்டது.

**முதல் உலகப் போரின் விளைவுகள்**

- 1919 பாரிஸ் அமைதி மாநாட்டின் மூலம் முதல் உலகப் போர் முடிவுக்கு வந்தது.
- ஜெர்மனியின் மீது வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை திணிக்கப்பட்டது.
- பன்னாட்டு சங்கம் உருவாக்கப்பட்டது
- அமெரிக்க குடியரசுதலைவர் உட்ரோவில்சன் 14 அம்ச கோட்பாட்டைஅறிவித்தார்.
- ஆஸ்திரியாவுடன் – செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை செய்து கொண்டன.
- பல்கேரியுடன்– நியூலி, துருக்கியுடன் –செவ்ரெஸ் ஒப்பந்தம் கையெழுத்தானது.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com


47. அ

**சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மா–சே–துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக.**

- 1918 ல் பீகிங் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராக பணிபுரிந்தார். மாவோ தீவிர பொதுவுடைமைவாதியாகவும் மாறினார்.
- ஊழல் வன்முறை மலிந்த "கோமிண்டாங்" கட்சியினர் நகர்புறத்தில் இறுக்கமாக இருப்பதை உணர்ந்த மாவோ விவசாயக் குடிகளை ஒன்று திரட்டினார்.
- காடுகளால் சூழப்பட்ட மலைப்பாங்கான பகுதிகளில் மாவோவும், தோழர்களும் ஏழு ஆண்டுகள் கழித்தனர்.
- "கோமிண்டாங் கட்சி "இவர்களை அழிக்கும் முயற்ச்சியில் ஐந்து முறை படையெடுத்தது. இருப்பினும் அம்மலைப் பகுதியை ஊடுருவ முடியவில்லை.
- மாவோவின் பலம் நாளுக்கு நாள் அதிகமானதால் பொதுவுடைமையாளர்களுக்கு சியாங்கைஷேக்கின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு கிடைத்தது.
- பாதுகாப்பு கருதி மாவோ ஹீனானை விட்டு அகல முடிவு செய்தார். 1934 ல் பொதுவுடைமை இராணுவம் 1 லட்சம் பேருடன் நீண்ட பயணமாக கிளம்பியது.
- கோமிண்டாங் தாக்குதலை சமாளித்து 6000 மைல்கள் கடந்து ஹேன்ஷியை வந்தடைந்தது.
- அங்கு மேலும் பொதுவுடைமை இராணுவத்துடன் லட்சக்கணக்கான பேர் இணைந்தனர்.
- அனைவரின் ஆதரவுடன் சீனபொதுவுடைமை அரசை மாசேதுங் நிறுவினார்.

ஆ

**இரண்டாம் உலகப் போரின் முக்கிய நிகழ்வுகள்**




Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com